**MC .NO: 9/2024** **DATE: 14.08.2025**

**மசா 1 - கவிதா க/பெ. சரவணன்**

**04.07.2025 தேதியிட்ட முதல் விசாரணையின் அடிப்படையில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எங்களுடைய திருமணம் பெரியவர்களின் ஏற்பாட்டின்பேரில் நடந்தது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் Diploma படித்துள்ளார். என்ன வேலை பார்த்து வருகிறார் என்றால் டிரைவராகவும், விவசாயமும் செய்து வருகிறார். டிரைவர் வேலை செய்து வருவதற்கான ஆவண ஆதாரம் நீதிமன்றதிற்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருமணத்தின் போது எனக்கு போட்ட நகை மற்றும் சீதன பொருட்களை நான் திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால் இல்லை. சீதன பொருட்களை மட்டும் பெற்றுக்கொண்டேன். 10 பவுண் நகையில் 6 பவுண் நகையை என் பேரில் அடகு வைத்து பணம் எடுத்துக்கொண்டு, அதற்கான பணமோ அல்லது நகையை மீட்டோ கொடுக்கவில்லை. மீது 4 பவுண் பெற்றுக்கொண்டேன். எதிர்மனுதாரர் அவரின் வீட்டிற்கு ஒரே மகன் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு ஒரே மருமகள் என்பதால் அந்த வீட்டின் வேலைகள் முழுவதும் நான் செய்து வந்தேன் என்றால் சரிதான். மனுவில் நான் எதிர்மனுதாரருக்கு 18 ஏக்கர் நிலம் உள்ளது எனவும், ஆடுகள் மாடுகள் வளர்த்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஒரே மருமகள் என்பதால் ஆடு, மாடுகளையும் நான் தான் பராமரித்து வந்தேன் என்றால் சரிதான். ஆனால் மனுவில் என்னை மேற்படி வேலைகளைக் கொடுத்து, கொடுமைப்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஒரே மருமகள் என்பதால் என்னை தவிர வேறு நபர்கள் செய்வதற்கு வழி இல்லை என்றால் சரிதான். என்னுடைய மாமனார், மாமியார் இருவரும் வயது ஆனவர்கள் என்றால் சரிதான். நான் தினமும் எதிர்மனுதாரர் என்னை குடித்துவிட்டு அடிப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எப்பொழுது இருந்து குடிப்பழக்கம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் திருமணம் ஆன நாள் முதலே குடிப்பழக்கும் ஆரம்பித்துவிட்டார். இதுசம்மந்தமாக மாமியார், மாமனாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். என்னுடைய பெற்றோரிடமும் சொல்லி அவர்கள் வந்து கேட்டார்கள். அதற்கு மாமியார், மாமனார் என்ன சொன்னார்கள் என்றால், என்னுடைய மகன் இப்படித்தான் இருப்பார். அவரை

எதுவும் கேட்டக்கூடாது என்று சொன்னார்கள். அதன்பிறகு எந்த நம்பிக்கையில் அவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்தீர்கள் என்றால் திருந்திவிடுவார் என்று இருந்தேன். குடிப்பழக்கத்தை நிறுத்துவதற்கு என்ன முயற்சி எடுத்தேன் என்றால் கோவிலுக்கு அழைத்துச் சென்று கயிறு கட்டினேன். நான் கூறுவது போல் குடிப்பழக்கம் எதுவும் இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் இல்லை. நான் மருந்து குடித்துவிட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என்று கூறியுள்ளேன். அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. கள்ளக்குறிச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 09.09.2022 ல் புகார் அளித்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த 2022 ம் வருடம் கொடுத்த புகாரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் கூறுவது போல் புகார் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவமே நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் ஆத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் குழந்தைக்காக பரிசோதனை செய்துக்கொண்டோம் என்று குறிப்பிட்டுள்ளேன். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதார் உடன் எனக்கு தான் வாழ பிடிக்கவில்லை என்றாலும், அதனால் தான் பொய்யான விவரங்களை என்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய 6 பவுண் நகையை Union Bank of India என்ற வங்கியில் அடகு வைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் யாருடைய பெயரில் வைக்கப்பட்டது என்றால் என்னுடைய பெயரில் தான் வைத்தோம். எந்த தேதியில் வைக்கப்பட்டது என்றால் 18.12.2023 அன்று வைக்கப்பட்டது. அந்த பணத்தை செல் மூலமாக எதிர்மனுதாரர் என்னிடமிருந்து மாற்றிக்கொண்டார். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த தொகை ரூ.1,21,000/- ஐ ஆன்லைன் வர்த்தகத்தில் முதலீடு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதை என்னுடைய கணவர் தான் செய்தார். ஆனால் அதற்கான ID என் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த ID No. SK000V3 என்றால் அது எனக்கு தெரியாது. எதிர்மனுதாரருக்கு தான் தெரியும். அந்த முதலீட்டில் வந்த லாபம் அனைத்தும் என்னுடைய ID க்கு தான் வரும் என்றால் சரிதான். ஆனால் அதை எடுப்பதற்கு எனக்கு தெரியாது. என்னுடைய Account க்கு தான் வரும் என்றால் சரிதான். ஆனால் Account Book எதிர்மனுதாரரிடம் தான் உள்ளது. அதில்

கொடுக்கப்பட்ட மொபைல் நம்பரும் எதிர்மனுதாரருடையது. பணபரிவர்த்தனை அனைத்தும் ஒரே மொபைல் போனில் இருந்து அனுப்பப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் மொபைல் போனே கிடையாது. கடந்த 1 வருடமாக தான் பயன்படுத்தி வருகிறேன். அதேபோல் மகளிர் உரிமைத் தொகையும் என்னுடைய Account Number க்கு தான் வரும் என்றால் சரிதான். ஆனால் அதையும் எதிர்மனுதாரர் தான் எடுத்துக்கொள்வார். தற்போது குடும்பத்தை விட்டு பிரிந்தவுடன் உரிமைத் தொகையை யார் எடுப்பது என்றால் தற்போது என்னுடைய பெயரை ரேஷன் கார்டில் நீக்கி விட்டார்கள். அதிலிருந்து எனக்கு உரிமைத் தொகைவரவில்லை. DSP office ல் நான் புகார் கொடுத்து, அதன்பேரில் தான் ரேஷன் கார்டில் என்னுடைய பெயர் நீக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னை குழந்தை பெற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவள் என்று திட்டி, மன உளைச்சலுக்கு ஆளாக்கினார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். குழந்தைப்பேறுக்கான பரிசோதனையில் எதிர்மனுதாரருக்கு குறைபாடு உள்ளது என தெரிவித்ததாக நான் என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த குறைபாடு உள்ள விஷயம் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு தெரியுமா என்றால் தெரியும். விஷயம் தெரிந்த உடன் மாமியார், மாமனார் என்னை திட்டியதாக கூறுவது பொய் என்றாலும் சரியல்ல. என்னுடைய நாத்தனார் முத்துலட்சுமிக்கும் இந்த விவரம் தெரியும் என்றால் சரிதான். அப்படி இருக்கும்பொழுது அவரின் மகள் தேசிகாவை எதிர்மனுதாரருக்கு 2-வதாக திருமணம் செய்துக்கொடுக்க முயற்சி செய்கிறார்கள் என்று கூறுவது பொய் என்றால் இல்லை. என்முன்பு தான் சொன்னார்கள்.

**<u>எதிர்மனுதாரரின் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி 19.09.2025 க்கு ஒத்திவைக்கப்படுகிறது.</u>**